IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 54/2016

D.W.1 - அப்ரார் அகமது

DATE - 08.08.2024

பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் தொடாந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.1,2 ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் எனது தகப்பனருடையதா என்றால் அவை அனைத்தும் அவர் கையொப்பத்தில் இருந்து வித்தியாசப்படுகின்றன. அதில் உள்ள புகைபடம் எனது தகப்பனாருடையது தான். வா.சா.ஆ.1,2 ல் உள்ள சாட்சிகள் யாரையும் நான் இன்று வரை சென்று விசாரிக்கவில்லை. வா.சா.ஆ.1, 2 யை தயார் செய்த பத்திர எழுத்தரை நான் இன்று வரை விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் நான் இரண்டு முறை பதிலுரை தாக்கல் செய்வதற்கு முன்னர் வா.சா.ஆ.1,2 யை வாங்கி பார்க்கவில்லை. வா.சா.ஆ. 1, 2 யை வாங்கி பார்க்காமலேயே அவை போர்ஜரி ஆவணங்கள் மற்றும் மிரட்டி பெறப்பட்ட ஆவணங்கள் என்று எனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, யூகத்தின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனது தகப்பனார் இறக்கும் வரையில் சொத்து வரி, மின் இணைப்பு, சுற்றுசூழல் பாதுகாப்புகான கட்டண ரசீதுகள், தொழிற்சாலை உரிமம் ஆகியவை என்

தகப்பனார் பெயரில் இருந்தன என்றால் சரிதான். சென்னையில் உள்ள சொத்துகள் மற்றும் இந்த வழக்கு சொத்துகளை பொருட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பாக பிரிவினை வழக்கு என் சகோதரிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதியை தரப்பினராக சேர்க்க நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வாதி அந்த வழக்கில் தானே மனு செய்து தரப்பினராக சேர்ந்துள்ளார் என்றால் சரிதான், இந்த விவரங்கள் எனது பிராமண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வருவாய் துறையில் வாதியின் பெயரை வருவாய் ஆவணங்களில் நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, வருவாய் துறையினைரை அணுகியபோது இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் நீக்கம் செய்ய இயலாது என்று சொல்லிவிட்டார்கள். 2002 ல் நான் சென்னை பெரிய மேடு காட்டுர் சடையப்பன் தெரு, கதவு எண்.5/2 ல் வசித்தேன் என்றால் சரிதான். 2010 ல் எனக்கும் என் தகப்பனாருக்கும் நான் சொத்தை பிரித்து கொடுக்க சொல்லியதால் பிரச்சினை ஏற்பட்டு பெரிய மேடு ஜி.2 காவல் நிலையத்தில் என் தகப்பனார் என் மீது புகார் கொடுத்து அதில் நான் பிரச்சினை நீதிமன்றத்தில் தீர்த்து கொள்கிறோம் என்று எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல, என் தகப்பனார் அவ்வாறு எந்த புகாரும் என் மீது கொடுக்கவில்லை. அந்த புகாருக்கு சி.எஸ்.ஆர் எண்.94/ஜி2 வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு எழுதி கொடுக்கப்பட்ட Hiba confirmation Letter பி.வா.சா.ஆ.8 யை நான் சாட்சி சொல்ல வருவதற்கு முன்பு மனு தாக்கல் செய்து முதன் முதலாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். 2007 ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் பி.வா.சா.ஆ.8 யை ஏன்

2023 வரை தாக்கல் செய்யவில்லை என்றால் அதை பற்றி எனது பதிலுரையில் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். எனது இரண்டாவது பதிலுரையில் 2 பி.வா.சா.ஆ.8 போல மற்றொரு ஆவணமும் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது மற்ற சொத்துக்கள் சம்மந்தப்பட்டது. பி.வா.சா.ஆ.8 ல் 2 பக்கங்கள் உள்ளதால் அவை இவ்வழக்கு சம்மந்தப்பட்ட இரு அயிட்ட சொத்துக்கள் சம்மந்தப்பட்டது என்பதால் எனது கூடுதல் பதிலுரையில் இரண்டு ஆவணங்களாக பி.வா.சா.ஆ.8 யை காண்பித்துள்ளேன். என் தகப்பனார் பெங்களூருவில் இறந்தார் என்றால் சரிதான். அவர் இறக்கும் போது வாதி தான் உடன் இருந்தார் என்றால் சரிதான். அவரது உடல் சென்னைக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பே நான் வீட்டில் உள்ள பீரோக்களை உடைத்து 500 கிராம் தங்கநகைகள், வாதி பெயரில் இருந்த இவ்வழக்கின் சொத்து அசல் பத்திரங்கள், வங்கி கணக்கு புத்தங்கள், ஆயுள் காப்பீடு பத்திரங்கள் ஆகியவற்றை நான் எடுத்து சென்று விட்டேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 யை யார் தயார் செய்தார்கள் என்று அதில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான், அதை என் தகப்பனார் தான் தயார் செய்தார். அதை என் தகப்பனார் வழக்கறிஞர் சுஜாவுதீன் என்பவர் மூலம் தயார் செய்தார், அந்த வழக்கறிஞர் பெங்களூரை சேர்ந்தவர். எங்கள் வீட்டில் இருந்த தட்டச்சு இயந்திரத்தில் அதை தயார் செய்தார். தட்டச்சு செய்தவர் அவருடன் வந்த அவரது உதவியாளர் ஆவார், அவர் பெயர் எனக்கு தெரியாது. சென்னையில் உள்ள எங்கள் வீட்டில் உள்ள உறாலில் உட்கார்ந்து அதை தட்டச்சு செய்தார். அவ்வாறு அந்த உதவியாளர் தட்டச்சு செய்யும் போது நாங்கள் மொத்தம் 10 பேர் இருந்தோம்.

நான், எனது மனைவி சாகிஸ்தா பாத்திமா, எனது மூத்த சகோதரி உறாஜிரா நஸ்ரின், அவரது கணவர் பஸ்லுர் ரகுமான், எனது இளைய சகோதரி யாஸ்மீன், அவரது கணவர் அலாவுதீன், மற்றொரு இளைய சகோதரி அஸ்பியா பாத்திமா, அவரது கணவர் லியாகத் பாஷா, எங்கள் கம்பெனி மேனேஜர் பாருக் அகமது ஆகியோர்கள் மற்றும் அந்த வழக்கறிஞர் அவரது உதவியாளர் இருந்தோம், மாலை 4 மணிக்கு தட்டச்சு ஆரம்பிக்கப்பட்டு மாலை 5 மணிக்கு அதில் என் தகப்பனார் கையொப்பம் செய்தார். அன்று காலை தான் அந்த பெங்களூர் வழக்கறிஞர் சென்னைக்கு வந்தார். பெங்களூரில் இருந்த எனது சகோதரிகள் ஒரு வாரம் முன்பே வந்து விட்டார்கள். நான் பேர்ணாம்பட்டில் இருந்து அதற்கு முதல் நாளான 09.08.2007 அன்று சென்னைக்கு சென்றேன். சாதரணமாக சனிக்கிழமை இரவு பேர்ணாம்பட்டில் இருந்து சென்னை சென்று விட்டு அடுத்த செவ்வாய்கிழமை பேர்ணாம்பட்டு திரும்பி விடுவேன். அந்த பெங்களூர் வழக்கறிஞர் Hiba வை பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.8 ல் தட்டச்சு செய்யப்பட்டுள்ள லெட்டர் பேட் பேப்பர் என் தகப்பனார் வழக்கமாக உபயோகிப்பதாகும். அந்த லெட்டர் பேட் பேப்பர் எத்தனை ஆண்டுகளாக என் தகப்பனாரால் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 தட்டச்சு செய்யப்பட்டுள்ள லெட்டர் பேட் பேப்பரை பயன்படுத்தி சொத்து வரி மாற்றம் கோரி சென்னை மாநகராட்சிக்கு மற்றும் மின் வாரியத்திற்கு நாங்கள் மனு ஏதும் கொடுத்தோமா என்றால் அவ்வாறு அந்த லெட்டர் பேட்டை நாங்கள் பயன்படுத்தவில்லை. 2017 வரை யாரும் கேட்காததால் வா.சா.ஆ.8 யை நாங்கள் காட்டவில்லை. என்னால் தாக்கல்

செய்யப்பட்டு குறியீடு செய்யப்படாத 23.03.2012 தேதியிட்ட பதில் கடிதம் நான் அனுப்பியது தான். வா.சா.ஆ.1, 2 ஆகியவை என் பொறுத்தவரை போர்ஜரியாக தயார் செய்யப்பட்டவையாகும். நான் வா.சா.ஆ.1,2 ஆகியவை போர்ஜரியாக தயார் செய்யப்பட்டவை என்பதை நிருபணம் செய்ய சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.1, 2 மற்றும் பி.வா.சா.ஆ.1 உள்ள எனது தகப்பனாரின் இடது கைபெருவிரல் ரேகையை ஒப்பிடு செய்ய தடயயியல் துறை கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற எனக்கு ஆட்சேபனையில்லை. 2011 க்கு பிறகாவது நாங்கள் தாவா சொத்துக்களை அனுபவிப்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, பேக்டரி லைசன்ஸ், சுற்றப்புறசூழல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். வருவாய் ஆவணங்கள் வாதியின் பெயரில் உள்ளன. பி.வா.சா.ஆ.10 முதல் 13 யை எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழை உபயோகப்படுத்தி என் பெயருக்கு பெற்றேன் என்றால் சரியல்ல, பெயர் மாற்றம் செய்ய அது கேட்கப்படவில்லை. மின்இணைப்பு சொத்தை என் தகப்பனருக்கு விற்றவர் பெயரிலேயே இருந்து வருகிறது. பி.வா.சா.ஆ.9 இன்று வரை என் தகப்பனார் பெயரிலேயே இருந்து வருகிறது. பெங்களூரில் இருந்து வழக்கறிஞர் வந்திருந்தால் பி.வா.சா.ஆ.8 யை பத்திர பேப்பரில் தான் தயார் செய்ய சொல்லியிருப்பார் என்றாலும் அதை நாங்களே தயார் செய்ததால் தான் லெட்டர் பேட் பேப்பரில் தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 நிலுவையில் உள்ளதா அல்லது ரத்து செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் சம்மந்தமான அனைத்து மூல ஆவணங்களும் என் வசம் உள்ளன என்றால் சரிதான். எல்லா சொத்து

ஆவணங்களும் என்னிடம் இருப்பதால் தான் பி.வா.சா.ஆ.8 யை நான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 தயார் செய்யபடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பெங்களூருவில் இருந்து எனது ஒரு சகோதரி அஸ்பியா பாத்திமா வந்தார், அவர் வந்த தேதி ஞுபாகம் இல்லை. எனது தாயார் 30.05.2007 அன்று இறந்து போனார் அதற்கு பிறகு என் தந்தைக்கு ஆறுதல் சொல்ல எனது சகோதரிகள் வரபோக இருந்தார்கள். நானும் போகவர இருந்தேன். துக்கத்தில் இருந்த எனது தகப்பனாரை சொத்தை எழுதி தர சொல்லி வற்புறுத்தினோமா என்றால் வற்புறுத்தவில்லை. எனது தகப்பனார் வாதியை 2008 அல்லது 2009 ஆண்டுவாக்கில் திருமணம் செய்தார். பி.வா.சா.ஆ.8 ல் சாட்சிகளாக பெங்களூர் வழக்கறிஞர் சுஜாவுத்தினும் எனது மைத்துனர் பஸ்லுர் ரகுமான் கையொப்பம் செய்தார்கள், அவர்கள் இருவரும் உயிருடன் இருக்கிறார்கள். அவர்களை கேட்டால் தான் பி.வா.சா.ஆ.8 ல் எந்த தேதியில் எங்கு வைத்து அவர்கள் அதில் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியவரும் என்றால் சரிதான்.2,3,4 பிரதிவாதிகளுக்கு ஆங்கிலம் தெரியும். பி.வா.சா.ஆ.8 யை நான் எடுத்த சென்று 2,3,4 பிரதிவாதிகளிடம் அதில் கையொப்பங்கள் பெற்றேன் என்றால் அவர்களும் அங்கு தான் இருந்தார்கள். பெங்களூர் வழக்கறிஞர் சுஜாவுத்தினும் மற்றும் எனது மைத்துனர் பஸ்லுர் ரகுமான் ஆகியோரை நான் சாட்சிகளாக விசாரிக்க போகிறேனா என்றால் அதற்கு என் தரப்பில் அவசியமில்லை. அவர்களை விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் நான் என் தரப்பில் அவர்களை விசாரிக்க போவதில்லை என்றால் சரியல்ல. வாதி 2012 ல் கொடுத்த இரண்டு வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டும் அதற்கு நான் கொடுத்த

பதில் கடிதத்தில் பி.வா.சா.ஆ.8 பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அந்த பதில் கடிதங்களை நான் அறிவிப்வை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை விவரம் மற்றும் அவற்றில் சொல்லியுள்ளேன். நான் பதிலுரை தாக்கல் செய்யும் வரை பி.வா.சா.ஆ.8 யை பற்றி எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். வக்கீலிடம் சென்ற பிறகு தான் பி.வா.சா.ஆ.8 யை தயார் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு தோன்றியது என்றாலும் அதனால் தான் அதை மறைத்து விட்டோம் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 யை நாங்கள் தயார் செய்ததால் தான் அதில் சாட்சி கையொப்பங்கள் செய்தவர்கள் உடைய தகப்பனார் பெயர், தொழில், முகவரி ஆகியவற்றை அதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ல் உள்ள சாட்சி கையொப்பங்கள் அந்த சாட்சிகளுடையது அல்ல அதையும் நான் போட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1,2 யை வாதிக்கு என் தகப்பனார் எழுதி கொடுத்து அந்த சொத்துக்களின் சுவாதீனத்தை அவருக்கு ஒப்படைத்ததால் தான் பட்டா அவர் பெயரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பட்டாவின் அடிப்படையில் வாதி சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. வாதி ஒரு நாள் கூட தாவா சொத்துகளின் சுவாதீனத்தில் இருந்ததில்லை. தமிழ்நாடு சுற்றுசூழல் வாரியத்திற்கு வாதி ரூ.10,00,000/- வீதம் இரண்டு முறை மொத்தம் ரூ.20,00,000/- செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பெயரில் தாவா சொத்துகளின் சர்வே எண்.400/1 ல் இருந்து 400/1 ஏ-2 என்று உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு தான் அதை பார்த்து பி.வா.சா.ஆ.8 ல் சர்வே எண்ணில் 400/1 ஏ-2 என்று நான் தட்டச்சு செய்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ல் எனது

தகப்பனாரின் விலாசத்தை குறிப்பிடும் போது கதவு எண்.5/2 என்று குறிப்பிடபட்டுள்ளது ஆனால் 2010 ஆம் ஆண்டு தான் பழைய கதவு எண்.2 என்று இருந்தது 5/2 என்று 2010 ஆம் ஆண்டு மாற்றம் செய்யப்பட்டது என்றாலும் அதனால் தான் 10.08.2007 தேதியிட்ட பி.வா.சா.ஆ.8 ல் 2010 ற்கு பிறகு தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1,2 ன் படி என் தகப்பனார் அதை எழுதி கொடுத்த தேதியன்றே உரிமையற்று போய்விட்டார் என்றால் சரியல்ல. அதை அவர் ரத்து செய்திருந்தாலும் அது செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1,2 ன்படி வாதிக்கு கொடுக்கப்பட்ட சுவாதீனம் தான் செல்லபடியாகும் என்றான பிறகு பி.வா.சா.ஆ. 8 ன் படி எங்களுக்கு சுவாதீனம் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவாபடி தீர்ப்பாகபடவேண்டும் என்றால் சரியல்ல. வாதியிடம் இருந்து அனைத்து ஆவணங்களையும் எடுத்து சென்று விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S ABDUL MALIK Digitally signed by S ABDUL MALIK